**O.S.175/2020**

Date : 09.08.2024.

வா.சா.1 : **வேலம்மாள்**

வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் (3 ம் பிரதிவாதி தரப்பில்)

நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கில் பிராது மற்றும் நிரூபண வாக்குமூலம் தயார் செய்ய எனது வழக்கறிஞருக்கு நான்தான் தகவல் கூறினேன் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி இராமசுப்பிரமணியன் பெற்ற கிரையம் என்னை கட்டுப்படுத்தாது என்று பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து சம்மந்தமாக ஏற்கனெவே திருநெல்வேலி 4 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.55/2011 ல் இவ்வழக்கு சொத்தில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கை வாபஸ் வாங்கிவிட்டு புது வழக்கு தாக்கல் செய்ய வேண்டி IA 48/2015 என்ற மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் தாக்கல்செய்யவில்லை. புது வழக்கை போடுவதற்கு பழைய வழக்கில் எந்தவிதமான அனுமதியும் நீதிமன்றத்தில் நான் வாங்கவில்லை என்றால் சரிதான். பழைய வழக்கில் பெட்டி ஏறி நான் சாட்சி சொல்லிவிட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதியும் சாட்சியம் அளித்து விட்டார் என்றால் எனக்கு தெரியாது. பழைய வழக்கு போடுவதற்கு முன்பு 2010 ம் ஆண்டு இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் நியாபகமில்லை. பழைய வழக்கில் என்னென்ன ஆவணங்கள் என் தரப்பில் போடப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு, இவ்வழக்கின் 2 ம் பிரதிவாதியான என் தாயார் ஒரு பதில் அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பிற்கு பிறகுதான் இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு போட்டபின்புதான் பதில் அறிவிப்பு கிடைத்தது. நான் வழக்கு கொடுத்த ஆண்டு 2011 என்றால் சரிதான். என் தாயார் எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு தேதி 15.02.2010 என்றால் சரியல்ல. எந்த தேதியில் பதில் அனுப்பயிதாக நான் கட்சி செய்கிறேன் என்றால் எனக்கு தேதி நியாபகம் இல்லை. பழைய வழக்கில் என் தாயார் அனுப்பிய பதில் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்திருந்தேன் என்றால் வழக்கறிஞரிடம் தான்

கேட்கவேண்டும். இந்த வழக்கின் பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எனது தாயார் அனுப்பிய பதில் அறிவிப்பு குறித்து குறிப்பிட்டு சொல்லாததற்கு என்ன காரணம் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பழைய வழக்கில் என் அம்மா மற்றும் தங்கை வழக்கறிஞர் வைத்து ஆஜர் ஆகவில்லை என்றால் ஆஜர் ஆனார்கள். வழக்கறிஞர் வைத்திருந்தார்கள். என் கட்சிப்படி முந்தைய வழக்கில் எனது தாயார் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். தேதி எனக்கு நியாபகம் இல்லை. எதிர்வழக்குரை மூலமாகத்தான் உயில் இருப்பது தெரியவந்தது என்று நான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். எதிர் வழக்குரை நகல் எடுத்து இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிலும் என் தாயார் ஆஜர் ஆகவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து என் தாத்தா வெற்றிவேல் என்பவருக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பாகம்படி அவர் தனது சொந்த சொத்தாக அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். என் தாத்தா காலம் சென்ற பின்பு அவர் மனைவியும், அவர் மகனும் வாரிசுகிரமமாக மேற்படி சொத்தை அடைந்தனர் என்றால் சரிதான். தாவா சொத்தை 3 ம் பிரதிவாதி 28.01.99 ம் ஆண்டு கிரையம் பெற்றார். வெற்றிவேலின் மனைவி 01.01.1999 ம் ஆண்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் நம்பி 28.01.1999 அன்று 3 ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் கொடுத்துள்ளார். அவருக்கு 95% வாய்பேச முடியாத ஊனம் முற்றவர் ஆவார். அவருக்கு 95% வாய்பேச முடியாத ஊனம் முற்றவர் என்ற விவரத்தை என் பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் ஏன் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இதற்கு முன்பாக நான் போட்ட வழக்கிலும் என் அப்பா பற்றிய விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். முந்தைய வழக்கின் பிராது நகல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த பிராது நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்ன என்று கேட்டால் காரணம் ஏதும் இல்லை. 1999 ல் கிரையம் வாங்கியதில் இருந்து 3 ம் பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. பிராதில் நான் அனுபவம் மீட்பு பரிகாரம் யாருக்கு எதிராக கேட்டுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. முந்தைய வழக்கான அசல் வழக்கு எண்.55/2011 ல் வா.சா 1 ஆக விசாரணை செய்யும் போது குறுக்கு விசாரணையில் "சொத்தை வாங்கிய பிறகு 3 ம் பிரதிவாதி அந்த வீட்டில் குடியிருந்து வந்தாரா என்றால் ஆம்" என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த சாட்சியம் அளித்த முந்தைய வழக்கான அசல் வழக்கு

எண்.55/2011 ல் சாட்சியம் அளித்த பகுதி பி.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கு தீர்வை யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. முந்தைய வழக்கில் தாவாசொத்தின் தீர்வை ரசீதுகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு 1994 ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனக்கு திருநெல்வேலி பேட்டையில் திருமணம் ஆனது. என் முகவரி கதவு எண்.21A துர்க்கை அம்மன் கோவில் தெரு, பேட்டை ஆகும். கதவு எண்.21A ல் கோபால கிருஷ்ணன் குடியிருந்து வந்தார் என்றால் அவர் எனது மாமனார் ஆவார். அவர் கதவு எண்.21 ல் குடியிருந்தார். என் மாமனார் இறந்து 20 வருடங்கள் ஆகிறது. என் மாமனார் இருக்கும் வரை நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில்தான் இருந்தோம் என்றால் நாங்கள் கதவு எண்.21A ல் இருந்தோம். என் மாமனார் வீட்டின் கதவு எண்.21 ஆகும். நாங்கள் சுமூகமான உறவு முறையில்தான் குடியிருந்து வந்தோம். எனது பாட்டி மகராசி அம்மாள் நான்குநேரியில் உள்ள வீட்டு கதவு எண்.63 ல் 60 வருடங்களாக குடியிருந்து வந்தார். மகராசி அம்மாளுக்கு என் கட்சிப்படி நான் கூறிய கதவு எண் 63 ன்படிதான் இருந்தது என்றால் சரிதான். மகராசி அம்மாளின் ரேஷன் கார்டு என்னிடம் உள்ளது என்றால் சரிதான். பேட்டையில் மகராசி அம்மாளுக்கு என்னை தாண்டி வேறு யாரும் நெருக்கமான உறவு முறையில் அவருக்கு வேறு யாரும் இல்லை என்றால் இருக்கிறார்கள். பேட்டையில் மகராசி அம்மாள் எந்த காலத்திலும் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 உயில் ஆவணம் பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் என்னுடைய மாமனார் கோபாலகிருஷ்ணன் இன்னாரென்று நிரூபித்தவர் என்ற இடத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மகராசி அம்மாளுக்கு பேட்டையில் எந்த சொத்தும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 பேட்டையில் பதிவு செய்யப்படவேண்டிய காரணம் என்னவென்றால் அவருடைய சொந்தகாரரர் வீட்டிற்கு வந்திருக்கலாம். நான் போட்டுள்ள வா.சா-ஆ.5 உயிலில் சாட்சி கையொப்பம் போட்டவர்கள் அனைவரும் பேட்டையில் உள்ளவர்கள் என்றால் எனக்கு அது பற்றி எ னக்கு தெரியாது. உயில் ஆவணம் வாசா.ஆ.5 ஐ இதற்கு முன்பு நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு தெரிந்தவுடன் படித்து பார்த்தேன். எனது கட்சிப்படி எனது தாயாருக்கு உயில் ஆவணம் பற்றி தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. உயிலின் அடிப்படையில் தாவா சொத்து சம்மந்தமாக பெயர் மாற்றம் ஏதும் செய்யவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வழக்குகள் தாக்கல் செய்வதற்கு முன்பு,

அதாவது 2011 ம் ஆண்டிற்கு முன்பு, இந்த உயிலின் அடிப்படையில் சொத்துக்கள் அடமானம் செய்யப்பட்டதாகவோ, அனுபவித்துவரப்பட்டது குறித்து காட்டுவதற்கு எந்த ஆவணங்களும் கிடையாது என்றால் பாட்டி இருக்கும் வரையில் என் தாத்தா பெயரில் தீர்வை ரசீது கட்டப்பட்டதற்கான ரசீது என்னிடம் உள்ளது. உயிலின் அசல் இதுவரை யாரிடம் இருக்கிறது என்று கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் யார் வைத்திருக்கிறார் என்பது எனக்கு தெரியவில்லை. பழைய வழக்கு நிலுவையில் இருந்த 2012 ம் ஆண்டு முதன்முதலாக இவ்வழக்கின் 2 ம் பிரதிவாதி உயிலை காண்பித்து சொத்துக்களை விற்பணை செய்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு பின்பும் அந்த வழக்கில் நான் பாகம் கேட்டுதான் சாட்சியம் அளித்தேன் என்றால் அந்த தருணத்தில் உயிலை வைத்து விற்றது எனக்கு தெரியாது. அதன் பின்புதான் எனக்கு தெரியும். அந்த வழக்கில் உயில் அடிப்படையில் விற்கப்பட்ட சொத்தின் ஆவணத்தை பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முந்தைய வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே என் தாயார் பதில் அறிவிப்பு கொடுத்து உயில் பற்றிய தகவல் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. உயில் என்னுடைய ஏற்பாட்டின் பேரில்தான் பேட்டையில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தின் அடிப்படையில் யாரும் எந்த உரிமையும் கோரியது கிடையாது என்றால் சரியல்ல. அந்த உயில் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் உயில் பற்றி தகவல் கூறிய பிறகும் நான் அதன் அடிப்படையில் உரிமை ஏதும் கோராமல் பாகம் கேட்டுதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பின்னர் எந்த விதமான முன் அனுமதியும் பழைய வழக்கை பொறுத்து நீதிமன்றத்தில் அனுமதி வாங்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பாகபிரிவினை பரிகாரம் கிடைக்காது என்பது தெரிந்த பின்புதான் உயில் அடிப்படையில் தங்கையின் மூலமாக சொத்தை விற்பனை செய்துவிட்டு பின்னர் அந்த வழக்கை மேல்நடத்தவில்லை என்று வலியுறுத்திவிட்டு இந்த வழக்கை தொடந்துள்ளேன் என்றால் சரியல்ல. 1999 ம் ஆண்டு கிரையம் பெற்றபோதே 3 ம் பிரதிவாதி சொத்தின் அனுபவத்தை எடுத்துவிட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அதற்கு பின் 12 வருடங்கள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என் தகப்பனார் வாய் பேச முடியாதவர் என்று நான் சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. மகராசி அம்மாள் இறப்பிற்கு பிறகு நம்பி வாரிசு பிரகாரம் தாவா சொத்தை

அடைந்து அதை 3ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. வா.சா-ஆ.5 உயில் ஆவணம் பற்றி எனக்கு முன்னரே தெரியாது என்று பிராதில் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. இந்த பொய்கட்சிக்கு அனுசரனையாக 1ம் பிரதிவாதி 2010 ம் வருடத்தில் அனுப்பிய பதில் அறிவிப்பை வேண்டுமென்றே இவ்வழக்கில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. முந்தைய வழக்கில் உயில் அடிப்படையில் எந்த பரிகாரமும் கேட்காததால் இந்த வழக்கில் அதன் அடிப்படையில் பரிகாரம் கேட்கும் உரிமையை நான் சட்டப்படி கைவிட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. பிராதில் நான் கேட்டிருக்கும் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.